REGD. No. M. 6311

தனி இதழ் ஓரணா
இலங்கையில் 10 சதம்
மலர் 1] [இதழ் 118

# நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை

"THE NAM NADU" A TAMIL DAILY : THE OFFICIAL ORGAN OF: THE D.P.F.

சந்தா விபரம்
உள்நாடு (இலங்கை உட்பட)
ஆண்டு ரூ. 24—0—0
6 மாதம் ரூ. 12—0—0
3 மாதம் ரூ. 6—0—0
வெளிநாடு:
ஆண்டு ரூ. 30—0—0
6 மாதம் ரூ. 15—0—0
3 மாதம் ரூ. 7—8—0

சென்னை: ஐப்பசி 13உ புதன் (29—10—53) ★ ★ ★ வெளியீடு: ஐப்பசி 14உ வியாழன் (30—10—53)

# வட இந்தியா-தென்னிந்தியா என்ற பேச்சு கிளம்புவதற்கு மூல காரணம்?

## வடக்கேயுள்ள பண உதவி நிதி நிறுவனங்களின் மாற்றுந்தாய் போக்கு

## தென்னாட்டுத் தொழில் நிலையங்களுக்குப் போதிய பண உதவிசெய்யத் தயங்கும் கொடுமதி

### 'இப்பகுதிக்கென தனி நிதி நிறுவனங்கள் நிறுவ வேண்டும்'

### ஆலப்புழை வர்த்தகர் மாநாட்டுத் தலைவரின் உள்ளக்கிடக்கை

ஆலப்புழை, அக். 28—

"வடநாட்டில் நிறுவப்பட்டிருக்கும் பெரிய பண உதவி நிதி நிறுவனங்களிலிருந்து, இன்றியமையாத பண உதவியை தென்னாட்டில் உள்ள தொழில் நிலையங்கள் பெறுவதென்பது முடியாததாக இருக்கிறது."

"மதராஸ், மைசூர், திருவாங்கூர்—கொச்சி ஆகிய மாநிலங்களுக்கென, தொழில் துறையில் உதவி செய்ய, அதுபோன்ற பொருள் உதவி நிதி நிறுவனங்களை, தென்னாட்டில் நிறுவ வேண்டும்."

ஆலப்புழை வியாபார சங்கத்தின் 21-வது மாநாட்டிற்குத் தலைமை வகித்த தோழர் ஜனார்தனப் பிள்ளை அவர்கள், மேற்குறித்தவாறு வடநாட்டின் பொருளாதார ஏற்பாட்டிற்கும், தென்னிந்தியாவில்

(3-ம் பக்கம் பார்க்க)

★★★★★★★★★★★

### திட்டக்குடி பஞ்சாயத்து போர்டு கட்டிடத்தில் அண்ணாதுரை படத் திறப்பு விழா

★

31—10—53 சனிக்கிழமை மாலை திட்டகுடி பஞ்சாயத்துப் போர்டு கட்டிடத்தில் தி மு. க. போதுச்செயலாளர் தோழர் அண்ணாதுரை அவர்களின் படத்தை தோழர் ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ., திறந்து வைப்பார். தோழர்கள் கி. மனோகரன், இரா. பாலகுருசாமி ஆகியோர் சொற்பொழி வாற்றுவர்.

★★★★★★★★★★★

### சிறையில் ஐவர் பட்டினி நோன்பு

ஜார்ஜ் டவுன், அக். 27—

கைது செய்யப்பட்ட கஜானா முன்னாள் மந்திரி சிட்னியும், இதர நான்கு ஜகன் கட்சித் தலைவர்களும் இன்று முதல் உண்ணா நோன்பு இருந்து வருவதாகத் தெரிகிறது. அவர்கள் அதற்கு முன்பே, பிரத்தியேகக் காவல் முகாமிற்கு அழைத்து வரப்பட்டனர். அவர்கள் கால வரையறையின்றி உண்ணாவிரதம் இருப்பார்களென்று சொல்லப்படுகிறது.

### சென்னை, ஆந்திர சட்டசபைகள்

ஆந்திர மாநிலப் பிரிவுக்குப் பின், எஞ்சியுள்ள உறுப்பினர்களைக் கொண்ட சென்னை சட்டசபைக்கூட்டம் நவம்பர் 15-ம் தேதி கூடும்.

அதுபோல, ஆந்திர அரசு அமைந்தபின், முதன்முதலாக ஆந்திர சட்டசபை கர்னூலில் நவம்பர் 23-ந் தேதி கூடுகிறது.

## பம்பாய் பிரதமர் மொரார்ஜிக்கும், ராஜஸ்தான் பிரதமர் வியாசுக்கும் வாய்ச் சண்டை!

—(:)—

### இந்திய சர்க்காரை மதிக்காமல் நடக்கிறார் தேசாய் என்று குற்றச்சாட்டு

### ஆபு பிரதேச விஷயமாக பம்பாய்க்கும் ராஜஸ்தானுக்கும் பகை வலுக்கிறது

ஆபு பிரதேசத்தை, சிரோயி பகுதியிலிருந்து துண்டித்து, பம்பாய் மாநிலத்துடன் இணைத்து விடுவது என்று முன்னால் கருதப்பட்டதை, புனராலோசனை செய்ய வேண்டுமென்று யூனியன் சர்க்கார் விரும்பியது.

இது குறித்து, பம்பாய் சட்டசபையின் கருத்தறிய நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமாறு, பம்பாய் சர்க்காருக்கு, யூனியன் சர்க்கார் கட்டளை ஒன்று பிறப்பித்திருந்தது.

யூனியன் சர்க்கார் விருப்பத்துக்கு இணங்க பம்பாய் பிரதமர் மோரார்ஜி தேசாய் விரும்பவில்லை என்றும், ஆபு பிரச்சினையை சில கிளர்ச்சிக்காரர்களே கிளப்பிக் கொண்டு இருக்கிறார்கள் என்று உண்மையைத் திரித்துக் கூறுவதாகவும், தேசாய்மீது ராஜஸ்தான் பிரதமர் ஜே. என். வியாஸ் குறைபடுகிறார்.

ஜயபூர், அக் 29—

யூனியன் சர்க்காரின் கட்டளையை மொரார்ஜி தேசாய் தட்டிக் கழிப்பதின் மூலம், இந்திய சர்க்காரை அவமதிக்கிறார் என்ற குற்றச்சாட்டுக்கு அவர் பாத்திரமாகிறார் என்று ராஜஸ்தான் பிரதமர் எடுத்துக் காட்டுகிறார்.

1952 - ஏப்ரல் மாதத்தில் முதல் முதலாகக் கூடிய ராஜஸ்தான் சட்டசபை, ராஜஸ்தானுடன்தான், ஆபு பிரதேசம் திரும்பவும் சேர்க்கப்படவேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றியது.

இதன்படி, இந்திய சர்க்காரும் பம்பாய் சட்டசபையின் கருத்தறிய வேண்டுமென்று ஆணை பிறப்பித்தது.

இருந்தாலும், ஆபு பிரதேசத்தை விட மறுத்து, சட்டசபை கருத்தறிய ஒருப்படாமல் தள்ளிப்போட்டுக் கொண்டே வருகிறார். இப்பொழுது யாரோ சிலர்தான் ஆபு பிரதேசத்துக்காகக் கிளர்ச்சி செய்கிறார்கள் என்று உண்மை நிலையை மறைத்துப் பேச ஆரம்பித்திருக்கிறார்.

ஆபுவை, அங்குள்ள மக்களின் விருப்பத்திற்கு எதிராக பம்பாய் மாநிலத்தால் அணைத்து வாழ முடியாது.

இவ்வாறு வியாஸ், பம்பாய் பிரதமர் மொரார்ஜியைக் கண்டித்துள்ளார்.

## கி. தலைவர் ஏ. ஐ. குட்டியப்பன், தி. மு. க. தோழர் சு. பாலன் 'நிரபராதிகள்' என விலக்கப்பட்டனர்

### சூளையில் நடைபெற்ற கலவர வழக்கு

சென்னை, அக். 29—

2—10 53-ல், சூளை தி. மு. கழகத்தார், சூளையிலுள்ள தேசிய சேவா சங்கத்தையும், கோவில்களையும் தாக்கியதாக, 17-வது வட்டச் செயலாளர் தோழர் சு. பாலன் அவர்கள்மீதும், அவர் வசிக்கும் கிராமத்தின் தலைவர் தோழர் ஏ. ஐ. குட்டியப்பன் உட்பட 12 பேர்மீது தொடரப்பட்ட வழக்கில், நேற்று, சென்னை எழும்பூர் 7-வது மாகாண மாஜிஸ்திரேட்டால் விசாரிக்கப்பட்டு, முதல் எதிரியான தோழர் குட்டியப்பன், 2-வது எதிரியான தோழர் சு. பாலன் (17-வது வட்டம் தி. மு. கழகச் செயலாளர்) ஆகிய இருவரையும் விடுவிக்கப்பட்டு, மற்ற 10 பேரை, நீங்கள் குற்றவாளிகளா என்று கேட்டார். தோழர்கள், குற்றவாளிகள் அல்ல என்று தெரிவிக்கவே, வழக்கு 3—11—53-ல் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

குறிப்பு:—கழகத் தோழர்கள் சார்பில், வழக்கறிஞர் சி. பார்த்தசாரதி அவர்கள் வாதாடினார்கள்.

★★★★★★★★★★★

### தோழர் கருணாநிதி—பேபி கந்தசாமி சந்திப்பு

★

27—10—53 காலை 11-க்கு, திருச்சி மத்திய சிறையில் தோழர் மு. கருணாநிதி அவர்களை, விசேஷ அனுமதியின் பேரில், டெல்லி பாராளுமன்ற உறுப்பினரான தோழர் பேபி கந்தசாமி அவர்கள் சந்தித்துப் பேசினார்.

"தோழர் கருணாநிதி அவர்கள் சற்று இளைத்துக் காணப்படுகிறார்; என்றாலும், மகிழ்ச்சியுடன் காணப்பட்டார். [illegible] வேலைகள் நல்ல முறையில் நடைபெறுவது அவருக்கு [illegible] நலமளிக்கிறது" என்று தோழர் பேபிகந்தசாமி அவர்கள் [illegible] வித்துள்ளனர்.

## ஐவர் சிறையில்!
### இன்று
## 59-வது நாள்


# நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை : 29—10—1953 வியாழன்


# வருந்தத்தக்கது!

ஆம்! விஷயம் வருந்தத்தக்கதுதான். 'குட்டிக் குளைத்துத் தாய் தலையில் வைப்பது' என்ற மூதுரை ஒன்று உண்டு. இது அரசியல் கட்சிக்கு முழுதும் பொருத்தமுடையதாகும்.

எந்த நடவடிக்கைக்கும் விதிமுறைகள் உண்டு. பைத்தியக்காரத்தனத்திற்குக்கூட முறையுண்டு என்று ஆங்கில மொழி இருக்கிறது. குறிப்பாக எந்த அரசியல் நடவடிக்கைக்கும் கட்டுப்பாடு நிரம்ப நிரம்ப முக்கியம். கண்ணியம் அதனினும் தேவைப்படுவது. அமைதி-பலாத்காரமில்லாமை, இவை இரண்டிற்கும் அடிப்படையாக இருப்பது.

நமது தி. மு. கழகத்தின் அடிப்படையும், வளர்ச்சியும், இந்த மூன்று உயர்ந்தக் கோட்பாடுகளையும் கொண்டு அமைந்திருப்பது. விருப்பு—வெறுப்பு எந்த நடவடிக்கைக்கும் அமைதி—கண்ணியம்—கட்டுப்பாடு கட்டாயம் இருந்தாக வேண்டும் என்பதைக் குறியாகக் கொண்டே இதுவரை நமது தி. மு. கழகம் இயங்கி வந்து இருக்கிறது. இனியும், அச்சிறந்த கோட்பாடுகளிலிருந்து, எந்தக் காரணத்தைக் கொண்டும், நமது தி. மு. கழகம் விலகி நடக்காது என்பது திண்ணம். இந்த நமது உறுதியை தி. மு. கழகத் தோழர்கள் அனைவரும் நன்கு உணர்ந்து கொண்டு இருக்கிறார்கள் என்பது முக்காலும் உண்மை.

நமது தோழர்களின் கட்டுப்பாட்டு நிலையையும், கண்ணியப் போக்கையும், அமைதி உளப்பாங்கையும், சென்ற அறப் போராட்டங்கள் பலவற்றிலும் பொதுமக்கள், அனுபவ வாயிலாக அறிந்திருக்கிறார்கள். அறப்போராட்டக் களங்களில், சர்க்கார் சார்பில் அமைதி—ஒழுங்கு கண்காணிக்க இருந்த, போலீஸ் அதிகாரிகள் பலரும், நமது அறப்போராட்ட வீரர்களின் நல்லியல்புகளைக் கண்டிருக்கிறார்கள். இதகுறித்து, அவர்கள் உள்ளத்தில் எழுந்த உயர்ந்த கருத்தை, அவர்கள் அனைவரும் தங்கள் நாவினால் வெளியிடவில்லையே அல்லாது, அவர்கள் உள்ளூரப் பாராட்டத்தான் செய்தார்கள் என்று நினைப்பதில் தவறில்லை.

தடியடி கொடுக்கச் சொன்ன அதிகாரிகளோ, சுட்டுத் தள்ளச் சொன்ன பெரிய அதிகாரிகளோ நமது கழக அறப்போர் தோழர்கள் பலாத்காரத்தில் ஈடுபட முனைந்தார்கள் என்று இதுவரை குற்றஞ்சாட்டினது கிடையாது. இதற்கு மாறாக, அறப்போராட்டக் களங்கண்ட நமது தி. மு. கழகச் செயல் வீரர்களின் தன்னையும் சாந்த நிலை கண்டு, வெளிப்படையாகவே பாராட்டி இருக்கிறார்கள். நமது கழகத்தின் திருவினையின் மூலக் கோட்பாட்டை நீதி மன்றங்களிலும் எடுத்துக் கூறியிருக்கிறார்கள், சர்க்கார் உயர்தர அதிகாரிகள். நீதிபதிகளின் நெஞ்சகத்திலும், தீர்ப்பளித்த நல்லேடுகளிலும், நமது தி. மு. கழகத்தின் அடிப்படை பண்பு ஆழப் பதிந்துபோய் இருக்கிறது.

நமது தி. மு. கழகத்தின் செயல் முறைகளுக்குக் கிடைத்துள்ள, இந்தத் தனிச் சிறப்பு நமது கழகத் தோழர்கள் அனைவராலும் பொன்னேபோல் போற்றத் தக்கதாகும். பூரிப்படையக் கூடியதுமாகும். நிற்க,

இந்த நற்பெயரை நாம் காப்பாற்றியாக வேண்டும். இந்தப் பெருமைக்கு இழுக்கு தேடும் முறையில் நமது தி. மு. கழகத் தோழர்களில் ஒருவர் செயலும் இருத்தல் கூடாது என்பதில் இரண்டிலிதக் கருத்து இருக்க நியாயமே கிடையாது. குறை கண்டபோது நயம்படக் கூறி அதிருப்தியைத் தெரிவிப்பதும், செயலில் உள்ள தவறை, சுட்டிக் காட்டித் திருத்த முயல்வதும் முறையற்றதாகாது. மக்களாட்சி முறையின் மாண்பில் இதுவும் ஒன்று. கட்சி வளர்ச்சிக்கு, இம்முறை இன்றியமையாதது என்பதை எவரும் ஒப்புவர்.

பலர் சேர்த்துவைத்த சொத்து கழகத்தின் புகழ். இரண்டொருவர் அந்தச் சொத்தை, அறிந்தோ, அறியாமலோ தங்கள் செயலால், பறிக்க முயலுவதை, பொருளை ஈட்டியவர்கள் பார்த்துக்கொண்டு இருக்க முடியுமா?

தி. மு. கழகத் தோழர்களின் ஒவ்வொருவருடைய மாசு மருவற்ற சேவையினால், நமது தி. மு. கழகக் குடும்பத்திற்கு விலைமதிக்க முடியாத, பெறுதற்கரிய புகழ் நிதி சேர்ந்திருக்கிறது. தெரிந்தோ, தெரியாமலோ ஒன்றிரண்டு பேர்கள் செய்யும் தவறான செயல்களால், குடும்பக் கௌரவம் குலைந்துபோக எவர்தான் சம்மதிப்பர்?

முன்பு ஒருமுறை, சென்னையில் நடைபெற்ற ஆச்சாரியார் கூட்டத்தில், ஆவேசத்திற்குப் பதில் ஆத்திரம் கொண்டுவிட்ட, இளைஞர் ஒருவர், கருப்புத் துணி கொடுத்ததை, முறைகேடு, தவறிய பாதை என்று மனம் நொந்து, நாம், வெட்கப்பட்டிருக்கிறோம்; நயமாகத் திருத்த முயற்சித்தும் இருக்கிறோம்.

அதுபோன்றே, இப்பொழுது ஒரு செய்தி, வேதனை தரும் செய்தி, ஆரூரில் இருந்து கிடைத்திருக்கிறது.

சென்னை மாநில கவர்னருக்கு அங்குக் கருப்புக் கொடி காட்டப்பட்டு இருக்கிறது. இது நாகரிக முறையா அல்லது வேறா, அவசியமுண்டா இல்லையா என்பதெல்லாம் வேறு விஷயம்.

அந்த அமைதியான ஆர்ப்பாட்டத்தின்போது ஒரு இளைஞர், கவர்னர் ஏறிவந்த காரில் கருப்புத் துண்டு ஒன்றை வீசி எறிந்தாராம். இதுகண்டு கவர்னரும் காரைவிட்டுகுதித்து ஆத்திரத்தோடு கருப்புக் கொடி காட்டியவர்களிடம் சென்றாராம்; 'ஏன் கருப்புக் கொடி காட்டுகிறீர்கள்?' என்று கேட்டாராம்; அந்த இளைஞன் பதில் சொல்லாமல் இருந்தாராம்; 'ஏன் பதில் சொல்லாமல் நிற்கிறாய்?' என்று, கவர்னர் மேலும் கேள்வி போட்டாராம்.

கவர்னர், சென்னை மாநில சர்க்காரின் தலைவர்; அவரிடத்தில் நமது கழகத்திற்கு எந்தவிதத் தனி வெறுப்பும் கிடையாது. அவர் கண்காணிப்பில் நடைபெறும் ஆச்சாரியார் சர்க்காரின் போக்கு, திராவிட மக்களின் நலன்களுக்குக் கேடு சூழ்வதாக இருக்கிறது, என்பது, நமது தி. மு. கழகத்தின் ஆழ்ந்த நம்பிக்கை. நாட்டு மக்களின் முடிவும் இதுதான்.

அறிவுரை கூறி, ஆச்சாரியார் சர்க்கார் போக்கைத் திருத்த முனையாது, கவர்னர் பாராமுகமாக இருக்கிறாரே என்ற அதிருப்தி நமது கழகத்துக்கு மட்டுமா, நாட்டு மக்களில் பெரும்பான்மையோருக்கு இருக்கிறது. புதிய கல்வித் திட்டத்தை நிறுத்தி வைக்க சட்டசபை கட்டளை பிறப்பித்ததை, ஆச்சாரியார் சர்க்கார் அலட்சியப்படுத்தி நடந்து கொண்ட காலையே, கவர்னர் அறிவுரை கூறி, சட்டசபைத் தீர்ப்புக்குக் கட்டுப்பட்டு நடக்குமாறு ஆச்சாரியாரை இணங்கச் செய்து இருக்கவேண்டும். இந்த முறையை மேற்கொள்ளுவதற்கு, இந்திய அரசியல் சட்டத்தில் இடமில்லை என்று சொல்லி, கவர்னர் தப்பித்துக்கொள்ள முடியாது. இத்துறையில் கவர்னருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுத்தான் இருக்கிறது, அரசியல் சட்டத்தில்.

இந்த ஒன்று மட்டுமல்லாமல், இன்னும் எவ்வளவோ உண்டு கவர்னர்மீது மக்கள் அதிருப்தி கொள்ள! ஒன்றை மட்டும் கூறினோம், விவகாரத்திற்காக! நிற்க,

கவர்னர் காரில் கருப்புக் கொடி வீசின இளைஞர், தி. மு. கழகத்தைச் சேர்ந்தவரா, அனுதாபியா, அல்லது புதிதாக முளைத்திருக்கிற இளைஞர் காங்கிரசைச் சேர்ந்தவரா என்பது விளக்கமாகத் தெரியவில்லை. இளைஞர், எந்தக் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும், அவருடைய செயல் வருந்தத்தக்கது என்பதில் சந்தேகமில்லை. இளைஞர், நமது தி. மு. கழகத்தைச் சேர்ந்தவராக இருந்தால், நாம், அவர் செயலை வன்மையாகக் கண்டிக்கிறோம். அவருடைய செயலைக் கண்டித்து ஆவன செய்ய வேண்டும் என்று மாவட்டக் கழகத்தைக் கேட்டுக் கொள்ளுகிறோம். செயல் வீரர்கள் அனைவரும் சேர்ந்து சேகரித்து வைத்துள்ள தி. மு. கழகத்தின் மங்காப்புகழ், இந்த ஒரு இளைஞரின் அர்த்தமற்றச் செயலால் களங்கப்பட நமது கழகத் தோழர்கள் விட்டுவிடமாட்டார்கள் என்பது நிச்சயம்.

கவர்னர் காரில் கருப்புக் கொடி வீசியவர் இளைஞர் என்று செய்தி கூறுகிறது. இளைஞர்தான் ஆத்திரத்தில் முறை தவறிவிட்டார் என்றால், கவர்னர் கோபப்படுவதும், காரைவிட்டு குதித்துச் செல்வதும் எந்தவகையான அறநெறியோ நமக்கு விளங்கவில்லை.

கவர்னருக்குள்ள அதிகாரத்துக்கேற்ப அந்தஸ்தும் இருக்கிறது. இது நமது வாதம் அல்ல. இந்தியக் குடியரசுத் தலைவருக்கு அதிகப்படியான சம்பளம் ஏன் என்ற வினா கிளம்பியபொழுது, 'அந்தஸ்துக்கேற்ற ஊதியம் தேவை' என்று இந்தியப் பிரதமர் ஜவகர் அந்தஸ்து வாதம் பேசினார். அதே அந்தஸ்து வாதக் கண்கொண்டுதான், கவர்னருக்குள்ள அந்தஸ்து பிரச்னையைக் கிளப்புகிறோம். எனவே, கவர்னரின் செயலும் வருந்தக்கூடியதே யாகும் என்பதில் சந்தேகமில்லை.

ஆச்சாரியாரின் அடக்குமுறையின் காரணமாக, டால்மியாபுரத்தில் இரண்டு நிரபராதிகளும், தூத்துக்குடியில் நான்கு நிரபராதிகளும் உயிர்விட்டபோது, கவர்னருக்குக் கருணையும் பிறக்கவில்லை, கண்ணும் சிவக்கவில்லை; அடுக்குமா இந்த அக்கிரமம் என்று கேட்க ஆத்திரமும் பிறக்கவில்லை. ஆனால், இவ்வளவுக்குப் பிறகுதான, கருப்புக்கொடி வீசிய இளைஞரின் விரும்பத்தகாத செய்கையைக் கண்ட பிறகுதான், கவர்னர் கேட்கிறார், 'உங்களுக்கு என்ன குறை?' என்று. இளைஞரின் செயலும் வருந்தக்கூடியதுதான். கவர்னரின் அலட்சியப் போக்கும், ஆத்திர நடைமுறையும் வருந்தக்கூடியதுதான்.

## பம்பாய் ஜவுளிக் கடைகளில் பரபரப்பு

### அரசியலார் ஆதரவு காட்டியதின் எதிரொலி

பம்பாய், அக். 26—

சென்ற சனிக்கிழமை யன்று சென்னை சர்க்கார்; ஜவுளி முதலாளிகளுக்கு கைகொடுத்ததின் விளைவாக, பம்பாயில் ஜவுளி விற்பனை அதிகரித்து வருகிறது. முன்னைக் காட்டிலும் நான்கு மடங்கு அதிகமாக விற்பனை நடைபெறுவதாகத் தெரிகிறது. இதனால் ஜவுளிகளின் விலை ஏதுமோ என மக்கள் அஞ்சுகின்றனர்,

## சென்னை மருத்துவக் கல்லூரிகள்

### ராக்பெல்லர் நிலையத்தின் மான்ய உதவி

சென்னை, அக் 29—

சென்னை மருத்துவக் கல்லூரிகளுக்கு, மருந்து ஆராய்ச்சி இலாக்காவுக்கான சாதனங்களை வாங்க 2000 டாலர் மானிய உதவியை ராக்பெல்லர் நிலையம் அளித்துள்ளது.

சென்னை மாநிலத்திலுள்ள வேலூர் கிருத்துவ மருத்துவக் கல்லூரிக்கும் வியாதியின் குணநிசயங்களைப் பற்றிய சில இலாகாவிற்கு, ஆராய்ச்சி சாதனங்கள் வாங்க 10,000 டாலர்களை அளித்துள்ளனர்.

## டாக்டர் ஜகன் இந்தியா வருவார்

லண்டன், அக். 28—

பிரிட்டிஷ் கயானாவின் பிரதமர் பதவியிலிருந்து நீக்கப்பட்ட டாக்டர் ஜகன் நவம்பர் இரண்டாம் வாரத்தில் இந்தியாவுக்குச் சென்று இரண்டு வாரங்கள் தங்குவாரெனத் தெரிய வருகிறது. அவருடைய நண்பர் பர்ன்ஹாமும் அவருடன்செல்வாராம்.

டாக்டர் ஜகன்; இன்று இந்திய ஐ கமிஷனர் காரியாலயத்தில் இந்திய அதிகாரி தர்மவீராவைச் சந்தித்தார்.

பிரிட்டிஷ் தொழிற் கட்சியின் காமன்வெல்த் இலாகாவின் கூட்டத்துக்கு வருமாறு டாக்டர் ஜகனை அழைக்க தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. கயானாவில் ஜகனின் எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்களும் இக்கூட்டத்திற்கு அழைக்கப்படுவார்கள்.

## மூன்று கை மாறிய மைசூர் மங்கை!

சிக்கந்தராபாத், அக். 28—

இளமை எழிலில் மிதக்கும் 16 வயது யுவதி ஒருத்தியை, அவர்களுடைய பெற்றோரிடமிருந்து கடத்திவந்து மூன்றும் முறையாக விலை பேசும்போது, மூவர் கைது செய்யப்பட்டனர்.

அந்தப் பெண் மைசூரைச் சேர்ந்தவள். அவள் பெயர் ஜெயலக்குமி. முதலில் இவளைக் கடத்தி வந்தவர்கள் ரூ. 400-க்கு விற்றுள்ளனர். பெண்ணை வாங்கியவர்கள் ரூ.650-க்கு இரண்டாவது முறையாக விற்றனர். மூன்றாவதாக வாங்கியவர் மீண்டும் அவளை விற்க முயன்றபோது தான் போலீசார் கையில் சிக்கினார்கள்.

## மாவட்ட கழகங்கள் காலாவதியாகலாம்!

சென்னை, அக். 28—

மாவட்ட கழகங் (ஜில்லா போர்டு)களை நீக்கிவிட்டு வட்ட (தாலுகா போர்டு) கழகங்களை அமைக்கும் ஒரு முக்கிய திட்டம் அரசியலாரின் பரிசோதனையில் இருந்து வருகிறது. கல்வி உட்பட பல முக்கிய பணிகளை வட்டக் கழகம் ஏற்று நடத்தலாம். மாவட்டக் கழகத்தைக் காட்டிலும் வட்டக் கழகத்தினால் தான் அதிக நன்மைகள் பெறலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

மாவட்டக்கழகங்களை எடுத்து விட்டாலும் பொதுவாகவுள்ள அபிவிருத்தி தகராறுகளைக் கவனிக்க ஒரு அலுவலகம் தேவைப்படும். மாவட்ட அபிவிருத்தி கவுன்சில் என இது அழைக்கப்படும்.

மாவட்டக் கழகங்களை எடுத்து விட்டாலும் பொதுவாக உள்ள அபிவிருத்தி தகராறை கவனிக்க ஒரு அலுவலகம் தேவைப்படும். மாவட்ட அபிவிருத்தி கவுன்சில் என அது அழைக்கப்படும்.

மாவட்டக் கழகங்களில் நியமிக்கப்பட்ட ஸ்பெஷல் அதிகாரிகளின் பதவி காலம் 1954 மார்ச் 31ம் தேதியுடன் முடிவடைகிறது.

## தென்னாட்டு முகம்மதியப் பெண்களை வடநாடு கடத்த முயற்சி

சென்னையிலுள்ள திருவல்லிக்கேணி முகமது உசேன் தெருவில் உள்ள ஒரு வீட்டிலிருந்து 5 முஸ்லீம் பெண்கள் மீட்கப்பட்டு சேவா நிலையத்திற்கு அனுப்பப்பட்டனர். இதுபற்றி வடநாட்டிலிருந்து வந்துள்ளதாகக் கூறப்படும் நான்கு முஸ்லீம்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வடஇந்தியாவுக்கு அழைத்துக்கொண்டு போவதாகச் சொல்லி ஆசை காட்டி, இந்தப் பெண்கள் அழைத்து வரப்பட்டு மேற்படி வீட்டிற்குள் அடைக்கப்பட்டனர்.

# இந்தியா, ரஷ்யாவை விட வேகமாக முன்னேறுகிறதாம்!

## இந்திய அமைச்சரின் மனச்சாந்தி

கர்னூல், அக். 28—
ரஷ்யாவை விட இந்தியா விரைவாக முன்னேறி வருவதாக இந்தியத் அனை உணவு மந்திரி இன்று ஓர் மாணவர்கள் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

ஜார் ஆட்சியை ஒழித்து பொதுவுடைமையர் அதிகாரத்திற்கு வந்தபின், 10 ஆண்டுகளுக்குப் பின்னர் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தைத் துவக்கினார்கள். இந்தியா ஏழாண்டுகளுக்குள்ளேயே முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் மூன்றாவது ஆண்டுக்கு வந்துவிட்டது. 35 ஆண்டுகளுக்குப் பின்னர் தான் ரஷ்ய மக்கள் சுபிட்சமாக வாழ்கிறார்கள். அந்த 35 ஆட்களுக்குப் பின்னர் இந்தியா உன்னத நிலையில் இருக்கும்.

## அரிசி ஏற்றுமதி செய்ய சிலோனின் துணிச்சல்

கொழும்பு, அக். 29—
தேவை ஏற்பட்டுள்ள நாட்டுக்கு 20,000 டன் அரிசி அனுப்பத் தயாராக இருப்பதாக சிலோன் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

80,00,000 மக்கள் கொண்ட சிலோனில் உற்பத்தியாகும் அரிசி, அந்நாட்டின் தேவையில் மூன்றிலொரு பங்கினருக்குத் தான் போதுமானது. எனினும், இந்நாடு, அரிசி ஏற்றுமதி செய்ய முன்வந்திருப்பது ஆசியாவில் அரிசி உற்பத்தி அதிகமாயிருப்பதற்கு ஒரு எடுத்துக்காட்டாகும். அரிசி உற்பத்தி அதிகம் கிடைத்துள்ள இந்தியா, சிலோனுக்கு 1,00,000 டன் உயர்தர தானியம் அளிக்க முன்வந்துள்ளது.

—யு.என்.ஐ.என்.

## திராவிட இளைஞர் நல அபிவிருத்தி கழகம்

சென்னை, அக். 28—
திராவிட இளைஞர் நல அபிவிருத்தி கழகத்தை 23-ம் தேதி மாலை, செயிண்ட் மேரீஸ் ஹாலில் நடைபெற்ற கூட்டத்தில், டாக்டர் ஏ. கிருஷ்ணசாமி துவக்கி வைத்தார். தோழர் பி. பால சுப்ரமணியம் விழாவிற்குத் தலைமை தாங்கினார்.

## வட இந்தியா......

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

உள்ள பொருளாதார அமைப்புக்கும் உள்ள தாரதம்மியங்களைச் சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்தியா முழுதும் உணவு நிலைமை ஒருவாறு நல்ல முறையில் இருந்தபோதிலும், திருவாங்கூர்–கொச்சி நிலைமை மோசமாக இருக்கிறது என்றும், இந்தியாவில் உள்ள பயங்கரமான பிரச்சினை வேலையில்லாத் திண்டாட்டம் என்றும், இதைக் குறைக்கும் வகையில் ஐந்தாண்டுத் திட்டத்தைத் திருத்தி அமைக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

வியாபார, தொழில் நிறுவனங்களுக்கும் தாராளமாகக் குறைந்த வட்டி விகிதத்தில் கடன் கிடைப்பதற்கான வசதியும், வாய்ப்பும் தேவை என்றும், அப்படிக் கிடைக்கும் கடனும் கைவசமுள்ள பொருள்கள் மீதும், இயந்திர சாதனங்கள் மீதும் அடுக்குக் கடனாகக் கொடுக்கப்பட வேண்டும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களுக்கு உதவித் தொகை

புதுடெல்லி, அக். 28—
1953—54-ம் ஆண்டில், ஷெட்யூல்டு வகுப்பு முதலிய தாழ்த்தப்பட்ட வகுப்புகளைச் சேர்ந்த 10 000 மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம் கொடுக்கலாமென்று, உபகாரச் சம்பளம் போர்டு செய்த சிபாரிசுகளை இந்திய சர்க்கார் ஏற்றுக்கொண்டது.

மெட்ரிகுலேஷனுக்கு மேல் படிக்கும் மேற்படி வகுப்பு மாணவர்களுக்கு இந்தச் சம்பளம் கொடுக்கப்படுமென, இந்திய சர்க்கார் கல்வி இலாகா அறிக்கை ஒன்று கூறுகிறது.

இதற்கு மட்டும் ரூ. 50 லட்சம் செலவாகுமென கணக்கிடப்படுகிறது.

## பம்பாயில் பகுத்தறிவு கால 'இராமன்'

பம்பாய், அக். 28—
ராம் லட்சுமண ராம்லே என்பவர், தம் மனைவியிடம் ஒழுங்கீனமாக நடந்து கொண்டதாக ஒருவனை மூக்கறுத்துவிட்டார். அதுபற்றிய வழக்கில் மூக்கறுத்தவருக்கு ஒருவாரக் கடுங்காவல் தண்டனையும், ரூ. 100 அபராதமும் விதித்தார். மாஜிஸ்டிரேட் எதிரி, வழக்குத் தொடுத்தவனை விரைவில் கண்களைப் பிடுங்குவதாகவும், சாட்சியம் கூறியவனை மூக்கறுத்துவிடப் போவதாகவும் கூறி சிறைபுகுந்தார்.

மாஜிஸ்டிரேட், 'நீ மூக்கறுப்பதில் நிபுணன் போலிருக்கே' என்று கூறினார்.

## ஆச்சாரியார் தத்துவம்

"அவனவன் ஜாதித் தொழிலை அவனவன் செய்ய வேண்டும். வண்ணார் வீட்டுப் பிள்ளைகள் படிக்க வேண்டியதில்லை; குலத் தொழிலைச் செய்தால் போதும். எல்லோரும் படித்தால் வேலை எங்கிருந்து கிடைக்கும்?"

—திருவான்மியூரில் ஆச்சாரியார்
29—6—'53

★

## கவர்னர் விளக்கம்

"தற்போது, மனிதர்கள் நல்லவர்கள் — கெட்டவர்கள் என்று பாகுபாடு செய்யப்படுவதுடன், தொழில்களும் இவ்வாறு பாகுபாடு செய்யப்படுகின்றன. சலவைத் தொழில்கள் போன்ற தொழில்கள் மட்டமானவை என தற்போது கருதப்படுகிறது. இத்தகைய தொழில்கள் மக்களுக்கு மிக உபயோககரமானவைகள். ஒரு குறிப்பிட்ட தொழில் நடத்துவோரை அதிலிருந்து வெளியேற்றி, மற்றொரு கண்ணியமான தொழிலில் அவரை அமர்த்துவதாலேயே அவருடைய தொழில் நிலையை அபிவிருத்தி செய்ய முடியுமென்று இப்போது கருதுவது விசித்திரமானது. தங்கள் தொழிலைப் பறிக்கும் கல்வியும் அவர்களுக்குப் போதிக்கப்படுகிறது. இதனால் அவர்கள் பெயர், வேலையில்லாதோர் பட்டியலில் சேர்ந்துவிடுகிறது. அவர்கள், வாழ்க்கையில் ஏமாற்றமடைகின்றனர்."

—தஞ்சையில் கவர்னர் பிரகாசா
'சு. மி': 27—10—53.

## ஜோதி அம்மாள் சுற்றுப் பயணம்

"மதுவிலக்கு மந்திரி ஸ்ரீமதி ஜோதி வெங்கடாசலம் 30-ந் தேதி இரவு கோவைக்குப் புறப்பட்டுச் செல்கிறார். கோவையிலிருந்து பொள்ளாச்சி சென்று, அங்கிருந்து உடுமலைப்பேட்டை வழியாகப் பழனி போகிறார். கோவிலுக்குச் சென்றுவிட்டு, நவம்பர் முதல் தேதி அங்கிருந்து கொல்லங்கோடு சென்று, அன்று மாலை கோவை திரும்பி, பெண்கள் நலவிருத்தி நிலையங்களைப் பார்வையிட்டு, மறுநாள் சென்னை திரும்புவார்."

—'சுதேசமித்திரன்,'
27-10-53.

"மதுவிலக்கு மந்திரி ஜோதி அம்மாள் மந்திரியான பிறகு முதல் தடவையாக வெளியூர்களுக்குச் சுற்றுப் பிரயாணம் செய்யப் போகிறாள். அவள், பழனிக்குச் சென்று, பழனி ஆண்டவரைத் தரிசித்துவிட்டு வரத் திட்டமிடுகிறாள். அங்கிருந்து பொள்ளாச்சி செல்வாள்; அங்கு ஹரிஜன மகாநாட்டுக்குத் தலைமை வகிப்பாள். மறுதினம் கொல்லங்கோடு சென்று, கோவை திரும்பி, சென்னை திரும்புவாள்."

—'தினத் தந்தி,'
29-10-53.

## நெல்லை மாவட்ட தி. மு. க. தோழர்களுக்கு

★

1—11—53 ஞாயிறு காலை 10-மணி முதல் நெல்லை மாவட்ட தி. மு. கழகப் பொதுக் குழுக் கூட்டமும், ஊழியர்கள் கூட்டமும், மாலை ஊர்வலமும், இரவு, நமது மாவட்டத்திலிருந்து சிறை சென்று திரும்பிய தி. மு. கழகத் தோழர்கள் அனைவருக்கும் ஓர் பாராட்டுக் கூட்டமும் நடக்க இருப்பதால், செயலாளர்கள், மாவட்டப் பிரதிநிதி உள்பட இன்னும் கலந்துகொள்ள விரும்பும் தி. மு கழகத் தோழர்கள் அத்தனை பேர்களையும் அடையாளச் சீட்டுடன் அழைத்துவர வேண்டுகிறேன் என செயலாளர் சு. வீரபாகு கேட்டுக் கொள்ளுகிறார்.

## சென்னை சர்க்காரின் புதிய செயலாளர்கள்

சென்னை, அக். 28—
சென்னை சர்க்காரின் ஒன்பது இலாகாக்களும் அதன் செயலாளர்களும்:—

பொது இலாகா:
ராமுண்ணி மேனன்.

நிதி:
டி. என். வர்க்கீஸ்

ரெவின்யூ:
எஸ். கே. செட்டூர்

பொது மராமத்து:
டி. எம். எஸ். மணி

ஸ்தல நிர்வாகம்:
எஸ். வெங்கடேஸ்வரன்

ஹோம்:
டி. என். எஸ். ராகவன்

தொழில்:
ஜே. சி. ராயன்

விவசாயம்:
ஆர். ஏ. கோபால்சாமி

சட்டம்:
சுப்ரமணிய நாடார்

## பிரதமர் நேரு மாளிகை முன் உண்ணா நோன்பு இருக்க ஆசிரியர்கள் முடிவு

### தங்கள் கோரிக்கைகள் அனைத்தும் இத்திங்கள் இறுதிக்குள் பூர்த்தி செய்யப்பட வேண்டும்

### 13,000 ஆசிரியர்களின் ஒருமனப்பட்ட முடிவு

மற்ற ஆசிரியர்களுக்குத் தரப்படுவது போலவே சம்பள உயர்வுக்காக, அதுவும் ஏப்ரல் முதல் தேதியிலிருந்து கட்டித் தர வேண்டும் என்ற கோரிக்கையை 13,000 பஞ்சாப் ஆரம்ப ஆசிரியர்கள் வெளியிட்டு இருக்கிறார்கள். இந்தக் கோரிக்கையை இத்திங்கள் 31-ந் தேதிக்குள் கவனித்துப் பரிகாரம் தேட சர்க்கார் முன்வர வேண்டும். இல்லையானால் பிரதம மந்திரி நேரு அவர்கள் மாளிகையின் முன் ஆசிரியர் சங்கத் தலைவர் உண்ணா நோன்பு மேற்கொள்ளுவது என்று ஆசிரியர் மன்றம் ஒருமனப்பட்ட முடிவிற்கு வந்திருக்கிறது.

ஜலந்தர், அக். 28—
பஞ்சாப் மாவட்ட ஆட்சி மன்றப் பள்ளிகளில் பணிபுரியும் ஆரம்ப ஆசிரியர் சங்கத்தின் தலைவர், தங்களுடைய கோரிக்கைகளுக்கு உடனடியாகப் பரிகாரம் தேட சர்க்கார் முன்வர வேண்டும் என்றும், தவறினால் நவம்பர் தொடக்கத்தில் நேருமாளிகையின் முன் தாம் சாகும் வரையில் உண்ணா நோன்பு கொள்ளப் போவதாகவும் அறிவித்து இருக்கிறார். இதுவுமல்லாமல், ஆசிரியர்களில் பொதுவேலை நிறுத்தமும் நடைபெறும் என்றும் அறிவித்திருக்கிறார்.

ஏதோ சில சலுகைகள் தருவதாக ஏற்கெனவே சர்க்கார் கூறின வாக்குறுதியின் மேல், முன்னர் ஒருமுறை வேலை நிறுத்தம் செய்த இந்த ஆசிரியர்கள், வேலைக்கு திரும்பினர் என்பது கருதத்தக்கது.

## கல்லக்குடி அறப்போர்

★

இன்று
109-வது நாள்

★

கல்லக்குடி அறப்போர் தலைவர் மு. கருணாநிதி, மற்றும் பல தோழர்கள் சிறையில்

★

இன்று
108-வது நாள்

## சென்னை மாவட்ட பொதுவுடைமைக் கட்சி மாநாடு

சென்னை மாவட்ட பொதுவுடைமைக் கட்சி மாநாடு 24-10-53 ஞாயிறன்று சென்னை மெமோரியல் ஹாலில் நடைபெற்றது. பொதுவுடைமைக் கட்சி பிரமுகர்கள் பலர் விழாவில் கலந்து கொண்டனர். தோழர் ஏ. எஸ். கே. அய்யங்கார் தலைமை வகித்தார்.

## தோழர் என். எஸ். இளங்கோ பம்பாய் பயணம்

தோழர் என். எஸ். இளங்கோ கீழ்கண்ட நிகழ்ச்சிப்படி பம்பாய் பகுதிகளில், கூட்டங்களில் கலந்து கொள்வதற்காக 4—11—53 அன்று காலை 7-30 மணிக்கு பம்பாய் எக்ஸ்பிரசில் சென்னையை விட்டுப் புறப்படுகிறார்.

6—11—53: ஆமதாபாத்.
7—11—53: மதுங்கா தி. மு. கழக திறப்புவிழா
8—11—53: தாராவி 'தூத்துக்குடிதின' பொதுக் கூட்டம்

## 'இன வெறியைத் தணிக்காவிடில் இரத்தக் களறி ஏற்பட்டே தீரும்'

### ஐ. நா. குழுவின் ஆணித்தரமான அறிக்கை

நியூயார்க், அக். 27—
தென்னாப்பிரிக்க இனத் தகராறைத் தீர்த்துக்கட்ட அமைதியான முறையில் பரிகாரம் காண வழிகள் வகுத்து அரசாங்கத்துக்கு அனுப்பிவைக்க அந்நாட்டிலுள்ள பல்வேறு இனத்தினரின் உறுப்பினர்கள் கொண்ட மாநாட்டை நடத்தலாம் என ஐ. நா. கமிஷன் தன் அறிக்கையில் கூறியுள்ளது.

தென்னாப்பிரிக்க இனத் தகராறை ஆராய கமிஷனுக்கு உரிமை உண்டென்றும் இனம், பால், மொழி ஆகியவை பற்றி வாதாடவும் கமிஷனுக்கு அதிகாரமிருக்கிறதெனவும் கமிஷன் உறுதி செய்திருக்கிறது.

கமிஷனின் அறிக்கை 372 பக்கங்கள் கொண்டது. அவ்வறிக்கை இம்மாதம் 13ம் தேதியன்று ஐ. நா. பொது சபைத் தலைவரான விஜயலக்ஷ்மியின் முன்வைக்கப்பட்டது.

முதலில் இக் கமிஷனுக்கு ரால்ப் பஞ்ச் நியமிக்கப்பட்டார், ஆனால் தென்னாப்பிரிக்கா அவரை வெறுத்ததாலும், அவர் நீக்ரோ ஆனதாலும் சிலி என்பவர் தலைவரானார்.

கமிஷனின் அறிக்கையில் "பாரபட்சமாக நடத்தப்படும் மக்கள் இன ஒதுக்கல் கொள்கையை ஏற்க மாட்டார்கள்; அக்கொள்கை நேர்மையுடையது என எவ்வளவுதான் வலியுறுத்தாலும் வெள்ளையர் அல்லாதார் அதை வெறுத்தொதுக்கத்தான் செய்வார்கள். இன ஒதுக்கல் கொள்கையால், சமரச முயற்சி பிரிந்துகொண்டே போகிறது. இன்னும் சொன்னால் சர்வதேச அமைதிக்கே அதனால் ஊறு நேரிடும். அதன் இறுதிப் பரிகாரம் பலாத்காரத்தைத் தவிர வேறு வழியில்லை என்றாகிவிடும்" என கமிஷன் விளக்கமாகக் கூறியிருக்கிறது.

## மலான் இனவெறி

### நெ. ஆ. பாதிரிகள் கண்டனம்

ஜோகன்ஸ்பர்க், அக். 27—
தென்னாப்பிரிக்க சர்க்காரின் இன, நிற பேதக் கொள்கையை நேற்று இங்கு நடந்த தென்னாப்பிரிக்க ஆங்கில பிஷப்புகள் வட்டாரத்திர மாநாட்டில் வன்மையாகக் கண்டித்தனர்.

"இத்தகைய இன, நிற பேதக் கொள்கை, ஜாதி முறையில்தான் கொண்டுபோய்விடும் என்று எங்களுக்குத் தோன்றுகிறது. அத்தகைய ஜாதிமுறையை நிறுத்துவர்கள் எப்போதும் வெறுத்து வருவர்," என்று அவர்கள் குறிப்பிட்டனர்.

# "தாரணி முழுதும் தமிழ் இலக்கியங்கள் பரவ வேண்டும்"

## பாரிஸ் பேராசிரியரின் தமிழ் இலக்கியப் பற்று

பெங்களூர் நகரப் பேரான்மைக் கழக உயர்நிலைப் பள்ளி, மாணவர் தமிழ் இலக்கிய மன்ற சிறப்புக் கூட்டத்தில், தமிழ் மொழியின் சிறப்புப் பற்றி விளக்கவுரை ஆற்றிய பாரிஸ் நகர இந்திய மொழிப் பேராசிரியர் தோழர் மெய்ல் என்ற தமிழ் மொழி அறிஞர் பேச்சின் முற்பகுதி நேற்றைய இதழில் வெளிவந்துள்ளது. அதன் பிற்பகுதி கீழே தரப்பட்டுள்ளது:—

"கலைஞன், இலக்கியாசிரியன், அறிஞர்கள் இலக்கியங்களை வளர்க்க காலம் வந்துள்ளது. சமீப காலத்தில் — பத்தாண்டுகளில்—பதிற்றுப் பத்துப் போன்ற நூல்களின் மொழிபெயர்ப்புகள் வெளிவந்துள்ளமை காண பெருமகிழ்வெய்துகிறேன். அத்தகைய முயற்சிகள் உற்சாகப்படுத்தப்பட வேண்டியன. தமிழ் இலக்கிய வளர்ச்சிக்காக மட்டுமின்றி, தமிழ் இனத்தின் விலை மதிக்க முடியா இலக்கியங்களை உலகத்தின்முன் வைப்பதற்கு ஏதாவது செய்யப்பட முடியுமென விரும்புகிறேன்.

**பல்வேறு மொழிகளில் வெளிவரும் பல பொருள் விளக்க நூல்களில் (என்சைக்ளோபீடியா) நீங்கள் பார்த்தால்,** அவைகளில் தமிழ் மொழி சரியாகக்கூட இடம் பெறவில்லை என்பதைப் பார்க்கலாம். இவை எல்லாம் மாற்றப்படவேண்டும். உலக பலபொருள் விளக்க நூலொன்றுக்கு, பிரெஞ்சு மொழியில் நான் ஒரு பகுதி எழுதுகிறேன். வருகிற ஆண்டுத் துவக்கத்தில் அந்நூல் வெளிவர இருக்கிறது. அதில்தான் முதன் முதலாக, தமிழுக்கு உரிய இடம் தரப்பட்டிருக்கிறது.

அதைத் தொகுப்பவர், "நீங்கள், ஆங்கிலம், பிரெஞ்சு ஆகிய மொழிகளுக்குரிய அளவு இடம் எடுத்துக் கொள்ளலாம்." என்று குறிப்பிட்டார். அது நடைமுறையில் ஒரு புதிய வழி.

வேறு நாட்டின் மொழிகளிலுள்ள இலக்கியங்களை எல்லாம் எடுத்து உலகத்தின்முன் வைக்கிறோம். உலக மதிப்புடைய எல்லாவற்றையும் வைக்கின்றதின் மூலம், உலகக் குடிமக்களாக ஆவதெப்படி என்கிற பிரச்னையை ஓரளவு தீர்ப்பதாக உணருகிறோம்.

## இந்தியா ஜப்பான் வர்த்தகம் வளர்கிறது

கல்கத்தா, அக். 28—

ஜப்பான் மீண்டும் ஆயுத சன்னத்தமாகுமாவென்று பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டுமென்று இங்குள்ள ஜப்பானிய வர்த்தகர்கள் கூறுகின்றனர்.

ஜப்பான் மீண்டும் ஆயுத சன்னத்தமானால், இந்தியாவிலிருந்து ஏற்றுமதியாகும் பழைய இரும்புக்கு அதிக விலை கிடைக்குமென்றும், இப்போது ஏற்றுமதியாகும் இரும்பு தாதுப் பொருள்—ஆயுதத் தயாரிப்பு இல்லாவிட்டாலும்—இந்தியாவில் வாகன் போக்குவரத்து அதிகப்படுத்தப்பட்டால் இரண்டு மடங்காக அதிகரிக்குமென்றும் கூறுகின்றனர்.

வாகன் பற்றாக்குறை பற்றி இந்திய சர்க்காருக்கு விண்ணப்பங்கள் போடப்பட்டிருக்கின்றன.

இதல்லாமல், மற்ற பொருள்களும் ஜப்பானுக்கு ஏற்றுமதியாகின்றன. இரு நாடுகளின் வர்த்தகமும் வளர்ச்சியடைந்து வருகின்றன.

## நாடார் மகாஜன சங்க 23-வது மாநாடு

### சென்னையில் நடைபெறும்

சென்னை, அக். 2?—

நாடார் மகாஜன சங்க 23-வது மாநாட்டின் வரவேற்புக் கூட்டம் சென்னை வண்ணாரப்பேட்டை, தனலட்சுமி பாடசாலையில், தோழர் சி. பழனியப்ப நாடார் தலைமையில், 25—10—53-ல், நடைபெற்றது.

சங்கத்தின் 23-வது மாநாட்டை 27—12—53-ல் சென்னையில் நடத்துவதென்றும், மாநாட்டின் தலைவராக நாகர்கோவில் டாக்டர் ஜான்வில்லையட் எம். பி., சி. எம். அவர்களையும், திறப்பாளராக தொடைக்காவல் தோழர் எஸ். ஜி. ஜெயராஜ் நாடாரையும், மாதர் மாநாட்டின் தலைவியாக அருப்புக்கோட்டை தோழியர் சின்னமணியையும், அ. பு. அ. சௌந்திர பாண்டியனார் படத்திறப்பாளராக விருதுநகர் தோழர் வி. வி. ராமசாமியையும் கேட்டுக் கொள்ளுவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

வரவேற்பு தலைவராக தோழர் பி. ராமசாமி, பொக்கிஷதாரராக தோழர் சி. பழனியப்பன், பொதுக் காரியதரிசியாக தோழர் பி. எம். ஏ. திரிபுரசுந்தர நாடாரும், துணைத் தலைவர்களாக ஏழு பிரமுகர்களும், காரியதரிசிகளாக 18 பிரமுகர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

துணைத் தலைவர்கள், காரியதரிசிகள், கமிட்டி அங்கத்தினர்கள் இவர்களைத் தேர்ந்தெடுக்க வரவேற்பு குழுவினருக்கு அதிகாரம் கொடுக்கத் தீர்மானிக்கப்பட்டது.

## நாடக அரங்கேற்றம்

மாயூரம், அக். 26—

22—10—53ல், மாயூரத்தில் புதுயீஸ்பரர் கோவில் தெருவில், அழகிரி நாடக மன்றத்தாரால், இரவு 10 மணிக்கு, கிடங்கல் தோழர் கே. ஆர். சம்பந்தம், பி. ஏ., எம். எல். ஏ., தலைமையில், "திலகம்" என்னும் சீர்திருத்த நாடகம் அரங்கேற்றப்பட்டது. தலைவர் பேசும்போது, இயல், இசை, நாடகம் இம்மூன்றில், நாடகம் நடிப்பது மிகவும் கடினமெனக் குறிப்பிட்டு, நடிகத் தோழர்களைப் பாராட்டிப் பேசினார்.

## 'விம்கோ' தீப்பெட்டிகளுக்கு 'செஸ்' விதிக்கப்பட்டால்

### முக்காலணா பெட்டிகளின் விலை ஓரணா ஆகும்

### பலர் வேலை இழக்க நேரிடுமாம்!

சென்னை, அக். 26—

விம்கோ தீப்பெட்டிகளுக்கு 'செஸ்' விதிக்க வேண்டும் என்ற அகில இந்திய குடிசைத் தொழில் போர்டின் சிபாரிசு, இந்திய சர்க்காரால் ஏற்றுக்கொள்ளப்படுமானால், இப்போது முக்காலணாவிற்கு விற்கப்படும் 60 குச்சிகள் கொண்ட ஒரு பெட்டியின் விலை ஒரு அணாவுக்கு விற்கப்படும் எனத் தெரிகிறது.

40 குச்சிகளைக் கொண்ட பெட்டிகள் அரையணாவுக்கு இப்போது விற்கப்படுகிறது. இவை 'விம்கோ'வினால் தயார் செய்யப்படுவதில்லை. இத்தமாதிரியான குறைந்த விலையுள்ள பொருள்கள் ஆதரிக்கப்பட வேண்டியிருப்பதால், இத்தரப் பெட்டிகளுக்கு 'செஸ்' விதிக்கப்படமாட்டாது; ஆகவே, அரையணா பெட்டிகளின் விலை அப்படியேதான் இருக்கும்.

குடிசைத் தொழில்களுக்கு மானிய உதவி கொடுத்து, ஆதரிப்பதன் மூலம் வேலையில்லாதவர்கள் சம்பாதிக்க வழி ஏற்படும் என்பது உண்மைதான் என்றும், ஆனால், இது, கடைத் தேங்காயை எடுத்து 'வழிப்பிள்ளையாருக்கு' உடைப்பதாக இருக்கிறது என்றும், ஒரு பிரபல தீப்பெட்டித் தொழிற்சாலை அதிகாரி கூறினார்.

'விம்கோ'வுக்கு இந்தியாவில் 5 இடங்களில் தொழிற்சாலைகள் உள்ளன; அவை, சென்னை, பம்பாய், கல்கத்தா, உத்திரப் பிரதேசம், அஸ்ஸாம் ஆகியவையாகும்.

இவைகள் எல்லாவற்றிலும் சுமார் 10,000 தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். 'செஸ்' விதிக்கப்பட்டால், ஐந்து சதம் பேரும் சிலர் வேலையிலிருந்து நீக்கப்பட நேரிடலாம் என்றும் சொல்லப்படுகிறது. ஏராளமாக அதிகரிக்கும் செலவைக் குறைக்க, இதைச் செய்வதைத் தவிர, வேறு வழியிருக்காது என்று அந்த அதிகாரி கூறுகிறார்.

## 'தமிழும், தமிழரும் உயர தமிழ் மொழி ஆட்சி மொழியாக வேண்டும்'

### கோவை கலைக் கல்லூரியில் பேராசிரியர் மு. வ.

கோவை, அக் 28—

கோவை பி. எஸ். ஜி. கலைக் கல்லூரிக் கழகத்தின் தமிழ் விழா பீளமேடு அரங்கசாமி நினைவு மண்டபத்தில் 22, 23, 24-ந் தேதிகளில் நடைபெற்றது. 23-ந் தேதி விழாவிற்கு தோழர் தி. சு. அவிநாசிலிங்கம் (மேல் சபை உறுப்பினர்) தலைமை வகித்தார். அவர் கூறியதாவது:

"உலகில் பல்லாயிர ஆண்டுகளுக்கு முன் உலவி வந்த மொழிகளில் பல இன்று வழக்கொழிந்து போயின. தமிழ் மொழி மட்டுமே மூவாயிரம் ஆண்டுகட்கு முன் இருந்ததுபோலவே இன்றும் இருந்து வருகிறது."

"பழங் கருத்துக்கள் போற்றுதலால் மட்டும் பயனில்லை; பழங் கருத்துக்கள் வாழ்வில் மக்கள் மதிப்பதாக இருந்தால்தான், அவை பயனுள்ளதாகும். மக்கள் வறுமையோடு வாழ வேண்டும்; நினைப்பிலே உயர்வு வேண்டும்; பெரும் சாதனைகளை நிறைவேற்ற வேண்டுமென்ற எண்ணம் வேண்டும்," என்று குறிப்பிட்டார்.

டாக்டர் மு. வரதராசனார் பேசுகையில் கூறியதாவது:—

"தமிழும், தமிழரும் உயர, கருத்தெல்லாம் கற்றுக் கொடுக்கும் மொழியாக தமிழ் மொழி ஆகி, பல்கலைக் கழக முதல் பாடமாக ஆவதும், தமிழ் மொழி ஆட்சி மொழி ஆதலும் அவசியம்."

"வரலாற்றிற் கெட்டிய காலம் தொட்டு இருநூறு ஆண்டுகட்கு முன்புவரை தமிழ் நாட்டில் தமிழ் மொழியே ஆட்சி மொழியாக இருந்தது. ஆட்சி மொழியாக இருக்கும் தகுதி அதற்குண்டு. இதில் நம்மிடம் அவநம்பிக்கை கூடாது. நம் தலைவர்களிடம் நம்பிக்கை பிறக்கவேண்டும்."

"பழம் பெரும் இலக்கியங்களிலே வாழ்வை ஒட்டிய கட்டுப்பாடு இருந்திருக்கிறது. அக்கட்டுப்பாடு ஒழுக்கத்திற்கு வரம்பாகவும் வாய்த்திருந்தது. இன்று அக்கட்டுப்பாடு தளர்ந்து விட்டது. எண்ணியபடி எழுதுவது வழக்கமாகிவிட்டது. உடலைப் பற்றி எழுதுபவர், உள்ளத்தில் வீணான, தவறான கருத்துக்களை எழுப்புவனவாகவும் இருந்து விடுகின்றன."

"கலை, நுட்பமாகவும், அழகாகவும் இருந்து இன்பத்தைத் தரவேண்டும்; போதை அளிப்பதாக இருக்கக்கூடாது."

## நல்ல பாதை கோரிக்கைக்கு மண் பாதையின் சிறப்பு பற்றிய போதனை

### ஓட்டுப் பெட்டியின்மீதே கண்ணாயிருப்பவர்களுக்கு கவர்னரின் கண்டனம்!

தஞ்சை, அக். 26—

சென்னைக் கவர்னர் பிரகாசா, தஞ்சை சென்றிருந்தபோது, அவருக்கு, தஞ்சை நகர சபையில் வரவேற்பளிக்கப்பட்டது. அதுபோது, அவர், வரவேற்புக்குப் பதிலளிக்கையில், குறிப்பிட்டதாவது:—

**மந்திர சக்தியல்ல!**

"தஞ்சைப் பெரிய கோவில், உலகத்திற்கே ஒரு பெரிய அறைகூவல். இதைப்போல ஓர் மாபெரும் கோவிலை இக்கால எஞ்சினீயர்கள் நிர்மாணிக்க முடியாது. ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் இக்கோயிலைக் கட்டிவைத்தவர்களின் பெருமை அளவிடற்கரியது. கோபுரக் கலசமாக உள்ள மாபெரும் கல்லை, 176 அடி உயரம் எப்படித் தூக்கினார்கள் என்பது வியக்கத்தக்கது. இக்கோயிலில் காணப்படும் கலை, சிற்பம் ஓவியத்தை இளைஞர்கள் அவசியம் தெரிந்து கொள்ள வேண்டும்."

**சிந்தனை தேவை**

"மற்ற நாடுகள் செய்வதைக் காப்பியடிப்பதுடன் நின்றுவிட்டால், சுதந்திரத்தில் என்ன பயன்? புதிய சிந்தனைகள், முயற்சிகள் தேவை. செயற்கரிய செயல்கள் செய்வதற்கு இக்கோயில் ஓர் எடுத்துக்காட்டு."

**ஆபத்தில் உதவவில்லை**

"சென்ற ஆண்டு, இந்த மாவட்டத்தில் புயல் வீசி, அதனால் கொடும் துன்பம் விளைந்தது. அப்போது, உடல் நலக் குறைவால் என்னால் இங்குவந்து பார்க்கமுடியவில்லை. நாமிருந்து வந்தபோதிலும் உங்களது வரவேற்புக்கு நன்றி."

"மக்களின் பொறுப்புக்களை, அவர்களுக்குக் கவுன்சிலர்கள் உணர்த்தவேண்டும். வோட்டர்களின் விருப்பங்களை, கவுன்சிலர்கள் தட்ட முடிவதில்லை என்று புகார் கூறப்படுகிறது."

"நியாயமாக நடக்க நகர மக்கள் உறுதி கொண்டால், நகர சபைகள் திறமையாக நடக்க முடியும்"

**கண் வைக்காதே!**

"தேர்தலில் தோற்க நேரிடும் என்றாலுங்கூட, நியாயமில்லாத வற்புறுத்தல்களுக்கு பணியக் கூடாது. ஓட்டுப் பெட்டியின் மீதே கண்ணாயிருக்கக் கூடாது"

**குறை!**

"சட்டசபையில் நுழைய விரும்புகிறவர்களுக்கு நகர சபை, ஒரு பயிற்சிக்கூடம். வருவாய் இனங்களில் பெரும்பாலானவை மத்திய அரசாங்கத்திடம் உள்ளன என்றும் தனக்கு எஞ்சுவது சொற்பந்தான் என்றும் மாநில அரசு கூறுவது போல, நகரசபைகளும் கூறுகின்றன."

**சபாஷ்!**

"ரஸ்தாக்கள் பற்றி குறை சொன்னீர்கள். தூசியில்லா ரஸ்தாக்கள் அமைக்க ஏராளமான பணம் செலவாகும். மக்களில் பெரும்பாலோர் வெறுங்காலோடு நடக்கின்றனர். கல் ரஸ்தாக்களில் நடந்தால் குத்தும்; மண் ரஸ்தாக்களில் நடந்தால் நோகாது. கப்பி ரஸ்தாக்கள் மோட்டார் கார்களுக்குத்தான் நலம். கார் வைத்திருப்பவர்கள் குறைவுதானே?" என்றார்.

## டுனீஷியாவிற்கு சுதந்திரம்

### ஐ. நா.—வில் சிபாரிசு

நியூயார்க், அக். 27—

டுனீஷியாவுக்கு முழு அரசியல் உரிமையும், சுதந்திரமும் கிடைப்பதற்கான எல்லா நடவடிக்கைகளையும் எடுத்துக்கொள்ள வேண்டுமென்கிற ஆசிய-ஆப்பிரிக்க அரபு நாடுகளின் சிபாரிசுத் தீர்மானத்தை ஐ. நா. அரசியல் குழு ஒப்புக்கொண்டது. ஆனால், பொது சபையில் இது நிறைவேறுவதற்கான மூன்றில் இரு பங்கு ஓட்டுகள் கிடைக்காதெனத் தெரிகிறது.

டுனீஷியாவில் இராணுவ ஆட்சி ரத்து செய்ய வேண்டுமென்றும், அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டுமென்றும் கொண்டுவந்த தீர்மானம் நிராகரிக்கப்பட்டது. அதன் பின், டுனீஷியாவுக்கு பூரண சுதந்திரம் கொடுக்க வேண்டுமென்பது பற்றிய அரபு, ஆசிய, ஆப்பிரிக்க நாடுகள் கொண்டுவந்த தீர்மானம் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

டுனீஷியாவின் சுதந்திரக் கோரிக்கையை எதிர்த்து ஆஸ்திரேலியா, பெல்ஜியம், போன்ற பல நாடுகள் ஓட்டளித்தன.

## கர்ப்பத்திலிருப்பது ஆணா, பெண்ணா?

லண்டன், அக். 28—

கர்ப்பத்திலிருப்பது ஆணா, பெண்ணா என்று கண்டுபிடிக்க ஒரு புதிய முறை கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

ஆறு மாத கர்ப்பிணிகளுக்குத்தான் இதைப்பற்றி கூற முடியுமாம். எச்சிலை எடுத்து, சில ரசாயன பொருள்களுடன் கலக்கின்றனர். அக்கலப்பு பழுப்பு நிறமாக மாறினால், கர்ப்பத்திலிருப்பது ஆண்; மஞ்சள் நிறமாகவோ அல்லது நிறமில்லாமலோ இருந்தால் அது பெண்.

இந்தப் பரீட்சைக்கு ஒரு கர்ப்பவதிக்கு, ரூ. 15 வீதம் வசூலிக்கப்படுகிறது.

முன்கூட்டியே கர்ப்பவதிகளுக்குக் குழந்தை இனத்தைத் தெரிவிப்பது நல்லதா என்று மனோதத்துவ நிபுணர்கள் கருத்து வேற்றுமை கொண்டிருக்கின்றனர்.

## ஸ்டாலின் மறைந்தார்—அவர் பெயரும் மறைந்து வருகிறது!

வாஷிங்டன், அக். 29—

கொலம்பியா பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ரஷ்யன் இன்ஸ்டிட்யூட்டின் நிர்வாக மெம்பரான பெர்ட்ராம் ஊல்ப், ரஷ்யாவில் அந்நாட்டுத் தலைவர்களே ஸ்டாலினைப் பற்றிய குறிப்புக்களை அகற்றி வருகின்றனர் எனக் கூறினார்.

சோவியத் பத்திரிகைகளில், ஸ்டாலினுடைய பெயரே காணப்படுவதில்லை என்றும், கலை, இலக்கியம் ஆகியவைகளுக்கு மார்ச்சு மாதத்தில் அளிக்க வேண்டிய பரிசுகள் இதுவரையிலும் வழங்கப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார். —யு.எஸ்.ஐ.எஸ்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்கள், அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரிய நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம்.ஏ.